


பள்ளம் தோண்டி அதில் மண்ணை இட்டு நிரப்பி, கொஞ்சூண்டு இடத்தை மட்டும் பள்ளமாகவே விட்டுவிட்டுக் கிளம்பிவிட்டார்கள், அந்த இடி.ஏ. இளைஞர்கள். அவர்கள் பணி அத்தோடு முடிவடைந்துவிட்டது. நேராக அபார்ட்மெண்டுக்கு வந்தார்கள். கேட்பாரற்று தேமேவென்று கட்டிலில் தலைகுப்புற விழுந்துகிடந்த குண்டுப் புத்தகங்களை அள்ளிப்போட்டுக் கொண்டார்கள். ஒரு துண்டு சிகரெட் கூட தரையில் இல்லாதபடி, அறையைச் சுத்தமாகக் கழுவினார்கள். நல்ல பிள்ளையாக ஓனரிடம் சாவியை ஒப்படைத்து கைகுலுக்கி முடித்ததும், ஜூட்.

பள்ளம் கொஞ்ச நேரம் அப்படியே இருக்கட்டும். சீக்கிரம் பரலோக பிராப்தியடையப் போகிற அந்தப் பாவப்பட்ட அரசாங்க உத்யோகஸ்தரைச் சந்தித்துவிடுவோம்.

லூயிஸ் கரீரோ பிளான்கோ. (Luis Carrero Blanco). எழுபது வயது பல் செட் தாத்தா. பிரதம மந்திரி பதவிக்கு வந்து ஆறு மாதங்கள் மட்டுமே பூர்த்தியாகியிருந்தன.

ஸ்பெயினின் முந்தைய ராணுவ ஆட்சியாளர், ஃபிரான்ஸிஸ்கோ ஃப்ராங்கோவின் ஜிகிரி தோஸ்த். ஃப்ராங்கோவின் நல்லாசியுடன் கப்பல் படை தலைமை அதிகாரியாகப் பணியாற்றியிருக்கிறார். வேலையில் படு சுத்தம். இரண்டாவது உலகப் போர் வெடித்தபோது, ஸ்பெயின் நாஜி ஜெர்மனியுடன் கூட்டுச் சேரக்கூடாது என்று ஒற்றைக்காலில் நின்றவர்.

கரீரோ பிளான்கோவுக்கு மிகவும் பிடித்த விஷயம், தேவாலயத்துக்குப் போவது. கர்த்தரே என்னைக் காப்பாய் என்று மண்டியிட்டு கண்களில் நீர் கசிய பிரார்த்தனை செய்வது. அலுவலகத்துக்குப் போகிறாரோ இல்லையோ, San Francisco de Borja தேவாலயத்துக்குப் போகாமல் ஒரு நாளும் இருந்ததில்லை அவர். பக்தி என்றால் பக்தி, அப்படியொரு பக்தி. சிலுவை படம் ஸ்டிக்கர் ஒட்டிய பெட்டியை அவரருகே கொண்டு சென்று குலுக்கினால், கோட் பாக்கெட்டில் கையைவிட்டு கிடைக்கும் பணத்தை அப்படியே அள்ளித் தந்துவிடுவார். பக்திமான் மட்டுமல்ல; பரோபகாரி.

பிடிக்கவே பிடிக்காத விஷயம் கம்யூனிஸம். காரல் மார்க்ஸ், மூலதனம், கருத்து முதல், பொருள் முதல் என்று தொடங்கினால் போதும், முதல் ஆளாக எழுந்து போயே போய்விடுவார். பேசுபவரின் பக்கம்கூடத் தலைவைத்துப் படுக்கமாட்டார்.

கரீரோ பிளான்கோவின் பக்தியைத்தான் இடி.ஏ. தனக்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொண்டது. 'மகனே, தேவாலயத்துக்கா போகிறாய்? இரு இரு, உன்னை பரலோகத்துக்கே அனுப்பி வைக்கிறேன்.' ஆகவே, அந்த நான்கு பேர். ஆகவே, அந்தப் பள்ளம்.

பள்ளம் ரெடி. அடுத்து, உள்ளே வைப்பதற்கான வெடிபொருள்.

இந்த இடத்தில் ஒரு விஷயம். இ.டி.ஏ.வுக்கும் வெடிகுண்டுகளுக்கும் அப்படி ஒரு பூர்வ பந்தம். மாதத்துக்கு ஒரு முறையாவது ஏதாவதொரு இடத்தில், எதையாவது வெடிக்க வைத்து வேடிக்கை பார்ப்பதில் அவர்களுக்கு அலாதி இன்பம். சிதறுவது கட்டடமாக இருக்கலாம். பூங்காவாக இருக்கலாம். தேவைப்படாத மனிதர்களாக இருக்கலாம். டார்கெட் எதுவோ அது வெடிக்க வேண்டும், சிதறவேண்டும் துல்லியமாக. தொழில் திருப்தி அதி முக்கியம்.

இரண்டு நிமிடங்களில் சேமியா உப்புமா செய்வது என்ன பிரமாதம்? ஒரே நிமிடத்தில் தேவைப்படும் வெடிமருந்துகளைத் தருவிக்கும் திறன் இ.டி.ஏ.வுக்கு உண்டு. தேடும் வெடி, உலகின் எந்த மூலையில் இருந்தாலும் சரி. ஒரு போன். அல்லது ஒரு எஸ்எம்.எஸ். சொன்ன தேதிக்கு, சொன்ன நேரத்துக்கு கூரியர் வந்துவிடும்.

இந்த முறை என்ன நினைத்தார்களோ, அரசாங்கக் கிடங்கிலிருந்தே வெடி மருந்தைக் களவாடிக்கொண்டு வந்துவிட்டார்கள். மொத்தம் 80 கிலோ. தீவிரவாதிகளை அழித்தொழிப்பதற்காக அரசாங்கம் சேமித்து வைத்திருந்த வெடிமருந்து. அதே வெடிமருந்தை வைத்து, அந்த தேசத்து பிரதம மந்திரியைச் சிதறடிக்க விரும்பியது இ.டி.ஏ. கொல்வது என்று முடிவெடுத்தாகிவிட்டது. கொஞ்சம் த்ரில்லிங்காகக் கொன்றால், காலாகாலத்துக்கும் சரித்திரத்தில் நிற்கலாம் அல்லவா? அதான்.

அடுத்து, கொண்டு வந்த வெடிமருந்தை, அதற்கென்று ஒதுக்கப்பட்டிருந்த குட்டிப் பள்ளத்தில் இட்டு நிரப்பும் பணி. இது மட்டும்தான் பாக்கி. முன்னர் அனுப்பிய கமாண்டோக்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு புதிதாக மூன்று பேரை மாட்ரிடுக்கு அனுப்பி வைத்தார்கள்.

நால்வர் அணி விட்டுச்சென்ற இடத்திலிருந்து மூவர் அணி வேலையை ஆரம்பித்தது. பள்ளத்துக்கு நேர் எதிரே இருந்த அபார்ட்மெண்டுக்குள் நுழைந்தார்கள். ஓனரைச் சந்தித்துப் பேசினார்கள்.

‘ஒரு சில தினங்கள் இங்கே தங்கிக் கொள்ள விரும்புகிறோம். இடம் கிடைக்குமா?’

‘அதற்குத்தான் ஹோட்டல்கள் இருக்கிறதே.’

‘என்னதான் இருந்தாலும் வீட்டில் தங்குவது போல் வருமா? தவிரவும், நாங்கள் தங்கப்போவது என்னவோ சில நாட்களுக்குத்தான் என்றாலும், முழு மாத வாடகையும் தரத் தயாராகவே இருக்கிறோம். நிம்மதி. வாழ்க்கையில் நிம்மதிதானே ஐயா முக்கியம்.’

‘அப்படியா? சரி.’

ஒரு மாத வாடகை என்னும் தேவதையிடம் மயங்கியபடி அவர்களை ரூமுக்கு அழைத்துச் சென்று சாவிக்கொத்தைக் கையில் திணித்தார்.

‘பை தி வே, நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?’

‘நாங்கள் எலெக்ட்ரீஷியன்கள்.’

அவர்கள் சொன்னது பகுதி அளவில் நிஜம். அவர்களிடம் ஸ்க்ரூ ட்ரைவர் இருந்தது. டெஸ்டர் இருந்தது. வயர், ஆணி, சுத்தியல் எல்லாமே இருந்தன. கூடவே, வெடிகுண்டும் அதற்கான ரிமோட் கண்ட்ரோலும்.

ராவோடு ராவாகக் கதவைத் திறந்து வெளியில் சென்று எண்பது டன் வெடிமருந்தைப் பள்ளத்தில் கொட்டினார்கள். வயர் சமாசாரங்கள் பொருத்தப்பட்டன. பள்ளத்தை மூடி வைத்துவிட்டு, அறைக்குத் திரும்பிவிட்டார்கள். ரிமோட் அவர்கள் கையில். ஜன்னல் அருகே நாற்காலியைத் தள்ளிப்போட்டுக்கொண்டு காத்திருக்க வேண்டும். பிரதம மந்திரியின் கார் கடந்துசெல்லும் சமயம், பொத்தானை அழுத்தினால் போதும்.

டிசம்பர் 20, 1973. கரீரோ பிளான்கோ தயாரானார். கோட், சூட், டை. கையில் ஒரு டைரி. டைரிக்குள் ஒரு பேனா. கூடவே டைப் செய்யப்பட்ட சில காகிதங்கள். காரில் ஏறி அமர்ந்தார். தயாராக இருந்த பாடிகார்ட் முன் சீட்டில், டிரைவருக்கு அருகில் அமர்ந்துகொண்டார்.

'ம், நேராக ஆபீஸ் போகலாம்.'

டிரைவர் வண்டியை ஸ்டார்ட் செய்தார். டைரியைப் பிரித்து மேய்ந்தார் கரீரோ பிளான்கோ. அன்றைய தினம் அவர் என்னென்ன செய்யவேண்டும் என்பதை நேர வாரியாக அவர் செகரட்டரி டைப் செய்து கொடுத்திருந்தார். கண்களை மேயவிட்டார் கரீரோ. என்னென்னவோ மீட்டிங். எதைப்பற்றியெல்லாமோ விவாதங்கள். வண்டி வண்டியாக நிறைய கோப்புகள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றுள் முக்கியமான சில ஆவணங்களுக்கு இன்றே முடிவெடுத்தாக வேண்டும். கையெழுத்தும் போட்டாக வேண்டும்.

நெற்றியைக் கீறிக்கொண்டார் கரீரோ. செய்தித்தாளை விரித்தார். எடிட்டோரியல் பத்தியை மேய்ந்தார். இ.டி.ஏ. கொட்டை எழுத்தில் இருந்தது அந்தப் பெயர். வழக்கமான புலம்பல்கள்தாம். ஸ்பெயின் தேசத்துத் தலையாய தலைவலி. தகர்த்து எறிய வேண்டிய தீவிரவாத இயக்கம். இந்த ஆண்டு மட்டும் அவர்கள் நிகழ்த்திய குண்டு வெடிப்புகள் இத்தனை. அரசாங்கத்தின் மீது கடுமையான அதிருப்தியில் இருக்கிறார்கள். அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

அரசாங்கம் என்ன செய்யப்போகிறது? இப்படித்தான் முடிகிறது, ஒவ்வொரு எடிட்டோரியலும். புத்தி ஜீவிகளும் மேதாவிகளும் எத்தனையோ கட்டுரைகளை எழுதிவிட்டார்கள். எத்தனையோ விவாதங்களை நிகழ்த்திவிட்டார்கள். பக்கம் பக்கமாக, பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதித் தள்ளிவிட்டார்கள். புரட்டிப் பாருங்கள். இறுதியில், இந்த ஒற்றை வரி நிச்சயம் இருக்கும். அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

கரீரோ பிளான்கோவுக்குப் புரியவில்லை. என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் இவர்கள்? உட்கார வைத்து டீ, பிஸ்கெட் கொடுத்து பேச்சுவார்த்தையா நடத்த முடியும்? உங்கள் கோரிக்கை என்ன என்றா கேட்க முடியும்? சரி அப்படியே கேட்டாலும் என்ன சொல்வார்கள் அவர்கள்? தனி பாஸ்க் (Basque) தேசம். அதே பல்லவி. என்ன செய்ய முடியும்? தூக்கிக் கொடுத்துவிட முடியுமா?

கம்யூனிஸ்டுகள் என்கிறார்கள். காரல் மார்க்ஸ் என்கிறார்கள். கேட்டால் வர்க்கப் போராட்டம் என்பார்கள். அடக்குமுறை, எதேச்சாதிகாரம் இன்னும் என்னென்னவோ பதங்களை எல்லாம் பயன்படுத்தி பந்தாடுவார்கள். என்ன செய்ய முடியும் அவர்களை?

தலை வலித்தது கரீரோ பிளான்கோவுக்கு. டிரைவரை அழைத்தார்.

'அலுவலகம் வேண்டாம். தேவாலயத்துக்குப் போ!'

வண்டியை லாகவமாக நிறுத்தி, திசையை மாற்றினார் அந்த டிரைவர். வண்டி வேகம் பிடித்தது.

மற்றொருபுறம், அந்த மூவர் அணி தயாராக இருந்தது. வறுகடலையோ, சிப்ஸோ ஏதோவொன்றை

மென்றுகொண்டிருந்தார்கள். ஜன்னலுக்கு அருகே ரிமோட். அட்டவணைப்படி, தானைத்தலைவர் இந்நேரம் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருப்பார். வேலை முடிந்ததும், தேவாலயம் போகலாம். எதற்கும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.

ஏதோ கதை பேச வாய் திறந்த அதே சமயம், அந்தக் கார் சீறிப் பாய்ந்து சென்றது. ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்தில் அதைக் கண்டுகொண்டான் ஒருவன். மற்றொருவன் சுதாரித்துக்கொள்வதற்குள், ரிமோட்டைப் பாய்ந்து எடுத்தான். இன்னொருவன். இருவரும் தங்கள் மனத்துக்குள் ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணத் தொடங்கினார்கள்.

கரீரோ பிளான்கோவின் கார் அந்தப் பள்ளத்தை நெருங்குவதற்கும், அவர்கள் ரிமோட்டை இயக்குவதற்கும் சரியாக இருந்தது.

படாரென்று வெடித்துச் சிதறியது அந்த கார். பிரதேசமே கிடுகிடுக்கும்படியான சத்தம். அபார்ட்மெண்ட்களில் தங்கியிருந்தவர்கள் அலறியடித்துக்கொண்டு வெளியில் பாய்ந்து வந்தார்கள்.

தரைக்கு மேலே, மேலே ராக்கெட் போல் இன்னமும் பறந்துகொண்டிருந்தது அந்த கார். இருபது மீட்டர் உயரத்துக்கு எழும்பிய பிறகு, அருகிலிருந்த ஐந்து மாடிக் கட்டடம் ஒன்றின் மீது அப்படியே நெருப்புடன் விழுந்தது.

காரிலிருந்து வெடித்துச் சிதறிய ஒரு பகுதி கரீரோ போவதாக இருந்த San Francisco de Borja தேவாலயத்தின் கூரை மீது விழுந்தது.

புகை. அலறல். பீதி. குழப்பம்.

தீயணைப்பு வண்டிகளும், ஆம்புலன்ஸும் விரைந்து வந்தன. பிரதம மந்திரி எங்கே? பாடிகார்ட், டிரைவர் இருவரது உடலும் கருகிக் கிடந்தன. ஆச்சரியம். கரீரோ பிளான்கோ உயிருடன்தான் இருந்தார். பேச்சு மூச்சற்றுக் கிடந்தார். முகத்தில் ரத்தம். உடலெல்லாம் ரத்தம். ஆனாலும் சுவாசம் நின்றுபோகவில்லை.

கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. அவசர அவசரமாக கரீரோ பிளான்கோவை அள்ளிப்போட்டுக் கொண்டு விரைந்தது ஆம்புலன்ஸ். ஆஸ்பத்திரி போய்ச் சேர்வதற்கும் கரீரோ இறந்துபோவதற்கும் சரியாக இருந்தது.